## September 26, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகத்துக்கு கிடைத்துள்ள உலகளாவிய அங்கீகாரத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
   i. இதுகுறித்து எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவு: தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் பாக் வளைகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகத்தை திராவிட மாடல் அரசு அறிவித்துள்ளது. இதற்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.
   ii. இந்த முன்னோடி முயற்சியைப் பாராட்டும் தீர்மானம், அபுதாபியில் நடைபெறவுள்ள சுற்றுச்சூழல் மாநாட்டுக்கு முன்பாக ஆன்லைன் வாககெடுப்பில் நிறைவேற்றப்பட்டது.
2. இந்திய விமானப் படைக்கு ரூ.62,370 கோடியில் 97 தேஜஸ் எம்கே-1ஏ விமானங்களை வாங்க ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் (ஹெச்ஏஎல்) மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
   i. 2027-28 நிதியாண்டு முதல் இந்த போர் விமானங்கள் விமானப் படைக்கு வழங்கப்படும்.
   ii. இந்த தேஜஸ் எம்கே-1ஏ விமானங்களின் 64 சதவீத உதிரிபாகங்கள் உள்நாட்டு தயாரிப்பாகும். புதிதாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 67 உதிரிபாகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.
   iii. விமானம் முழுவதும் இந்தியாவில் கட்டமைப்படுகிறது. இந்த இலகுரக போர் விமானத்தில் ஸ்வயம் ரக்ஷா கவச் தொழில்நுட்பம் உள்ளது. இது எதிரிகளின் ரேடார் கண்காணிப்பில் இருந்து விமானத்தைக் காக்கும். இது தவிர மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்புகளும் உள்ளன.
   iv. பொதுத் துறை நிறுவனமான ஹெச்ஏஎல் நிறுவனத்துக்கு மத்திய அரசு சார்பில் அளிக்கப்படும் மிகப்பெரிய ஒப்பந்தம் இதுவாகும். விமானப் படையில் இருந்து விடைபெறும் மிக்21 போர் விமானங்களுக்கு மாற்றாக இந்த விமானங்கள் இணைக்கப்படுகின்றன.
   v. அதிக உயரத்தில் பறந்து தாக்கும் திறன்கொண்ட இந்த போர் விமானத்தை வான், கடல் எல்லைகள் பாதுகாப்புக்கும், ஊடுருவும் எதிரி விமானங்களைத் தாக்கி அழிக்கவும் பயன்படுத்த முடியும்.
   vi. இந்த விமானத் தயாரிப்பு மூலம் அடுத்த 6 ஆண்டுகளுக்கு இந்தியாவில் ஆண்டுதோறும் 11,750 நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும். உள்நாட்டு விமானத் தயாரிப்புத் துறைக்கு இது உத்வேகம் அளிக்கும்.
3. இந்திய விமானப் படையில் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்த ரஷிய தயாரிப்பான மிக்-21 போர் விமானம் முழுமையாக பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட உள்ளது.
   i. சண்டீகரில் உள்ள விமானப்படை நிலையத்தில் வெள்ளிக்கிழமை (செப்.26) நடைபெறும் விழாவில், 'சிறுத்தைகள்' என்று அழைக்கப்படும் விமானப் படையின் 23-ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த கடைசி மிக்-21 போர் விமானத்துக்கு ஓய்வு அளிக்கப்பட உள்ளது.
   ii. பாகிஸ்தானுக்கு எதிரான 1965 மற்றும் 1971-ஆம் ஆண்டு போர்களில் இந்த விமானங்கள் முக்கியப் பங்காற்றின. 1999-ஆம் ஆண்டு கார்கில் போர் மற்றும் 2019-ஆம் ஆண்டு பாலகோட் தாக்குதலிலும் மிக்-21 போர் விமானங்கள் முக்கியப் பங்காற்றின.
   iii. அதே நேரம், பல முறை விபத்துகளிலும் இந்த போர் விமானம் சிக்கியது, இதன் பாதுகாப்பு குறித்த சந்தேகங்களையும் எழுப்பியது.

4. இந்திய உணவுப் பதப்படுத்துதல் துறையில் சர்வதேச முதலீடுகளுக்கான வாயில்கள் திறந்தே உள்ளன என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
    i. சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் தொடர்பான புத்தாக்கங்களில் இத்தொழில் துறையினர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
    ii. உணவுத் துறை புத்தாக்கத்தில் உலகளாவிய மையமாக இந்தியாவை நிலைநிறுத்துவதுடன், இத்துறையில் சர்வதேச முதலீடு களை ஈர்க்கும் நோக்கில், புது தில்லியில் நான்காம் ஆண்டு 'உலக உணவு இந்தியா' சர்வதேச கண்காட்சி வியாழக்கிழமை(செப்.25) தொடங்கியது.
5. தீனதயாள் உபாத்யாயவின் 109-ஆவது பிறந்த தினத் தையொட்டி அவருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் மரியாதை செலுத்தினர்.
6. கர்ப்பப்பைவாய் புற்றுநோய் தடுப்பு மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இந்தியாவின் இரண்டாவது பெரிய மூன்றாம் தரப்பு நிர்வாகச் சேவை (டிபிஏ) நிறுவனமான விடால் ஹெல்த்தும், உலகின் மிகப்பெரிய தடுப்பூசி தயாரிப்பாளரான சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியாவும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. இது குறித்து விடால் ஹெல்த் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரும் அக்டோபர் 1 முதல்.
    i. கர்ப்பப்பைவாய் புற்று நோயைத் தடுக்கும் ஹெச்பிவி தடுப்பூசி சேவைகளை விடால் ஹெல்த் தளம் மூலம் சுலபமாகவும் இலவசமாகவும் பெற முடியும். அந்த வகையில் இச்சேவையை வழங்கும் முதல் தளமாக விடால் ஹெல்த் விளங்கும்.
7. கடந்த 2007-ஆம் ஆண் டில் தனது தேர்தல் பிரசாரத்துக்காக லிபி யாவிடமிருந்து நிதி பெற்று சதிச் செயலில் ஈடுபட்டதாக பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸிக்கு (70) அந்த நாட்டு நீதிமன்றம் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண் டனை விதித்தது. அண்மைக்காலங்களில் பிரான்ஸின் முன் னாள் அதிபர் ஒருவர் சிறைக்கு அனுப்பப்ப டுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பி டத்தக்கது.
8. வட கொரியாவிலுள்ள நான்கு இடங்களில் அணு ஆயுத எரிபொருளாகப் பயன்படும் யுரேனியத்தை செறிவூட்டும் ஆலைகள் இயங்குவதாக தென் கொரியா குற்றஞ்சாட்டியது.
    i. வட கொரியாவின் யோங்பி யோன் உள்பட நான்கு இடங்களில் உள்ள அணுசக்தி மையங்களில் யுரேனியம் செறிவூட்டும் கருவிகள் தினமும் இயங்குகின்றன. எனவே, வட கொரியாவின் அணுசக்தி திட்டங்களைத் தடுத்து நிறுத்த வேண்டியது மிகவும் அவசரமாகியுள்ளது.
    ii. தற்போது வட கொரியாவிடம் 2,000 கிலோ உயர் செறிவு யுரேனியம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2018-இல் 250 முதல் 500 கிலோ வரை இருந்த உயர் செறிவு யுரேனியம் இருப்பைவிட பன்மடங்கு அதிகம்.
9. கன்னட இலக்கியவாதி எஸ்.எல்.பைரப்பாவுக்கு மைசூரில் நினைவிடம் அமைக்கப்படும் என கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.
    i. இருபதுக்கும் மேற்பட்ட நாவல்களைப் படைத்திருக்கும் எஸ்.எல்.பைரப்பா (94), காலமானார். அவரது படைப்புகள் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
10. தென் கொரியாவில் நடைபெறும் பாரா உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில், இந்தியாவுக்கு 3 பதக்கங்கள் உறுதியாகியுள்ளன. காம்பவுண்ட் ஆடவர் தனிநபர் ஓபன் பிரிவில் ராகேஷ் குமார், தோமன் குமார் இறுதிக்கு முன்னேறி யுள்ளனர். அதிலேயே மகளிர் தனிநபர் பிரிவில் ஷீத்தல் தேவி இறுதிக்கு வந்துள்ளார்.